# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
***********

**முறையீட்டு மனு எண்: 177/2018/பே**
**ஆணை நாள் 18–12–2018**

**திரு. M. ஆறுமுக நயினார்,**
**உரிமையாளர்,**
**கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,**
**2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,**
**மைலாப்பூர்,**
**சென்னை – 600 004.**

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
புதூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

சென்னை, மைலாப்பூர், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை பகுதியினைச் சேர்ந்த திரு.எம்.ஆறுமுக நயினார், என்பவரது 26.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.177/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், திருநெல்வேலி மாவட்டம், புதூர்(செ) பேரூராட்சியில் செயல்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்க திட்டப் பணிகளுக்கான ஒப்பந்த விளம்பரம், தனது நிறுவனம் மூலம் விளம்பரப்படுத்தப் பட்டமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.28,464/– பட்டியல் எண் 106/2015–16 12.06.2015 மூலம் அனுப்பப்பட்டதாகவும், மேற்படி தொகை இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

07.08.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.09.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் பட்டியல் மேலொப்பம் பெறும் பொருட்டு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின்

உதவி இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பட்டியல் மேலொப்பம் கிடைக்கப்பெற்றவுடன் தொகை வழங்கப்படும் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

17.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற அழைப்பாணையின்படி மேற்படி பொருள் தொடர்பான விளக்கங்களைப் பெறவேண்டி முறையீட்டு மனுதாரர் மற்றும் புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 17.12.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் 03.12.2018 நாளிட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டம், புதூர்(செ) பேரூராட்சி மூலம் வழங்கப்படவேண்டிய ஒப்பந்தவிளம்பர நிலுவைத் தொகை ரூ28,464/– மேற்படி பேரூராட்சியின் காசோலை எண்.322890/நாள்.27.11.2018ன் மூலம் 01.12.2018ல் பெறப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் செயல் அலுவலரது 14.12.2018 நாளிட்ட இறுதி அறிக்கையும் வரப்பெற்றுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, செயல் அலுவலரது முடிவு அறிக்கை மற்றும் 03.12.2018 நாளிட்ட முறையீட்டு மனுதாரரது ஒப்புகை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. இம்முறைமன்ற நடவடிக்கையினைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டம், புதூர்(செ) பேரூராட்சி மூலம் முறையீட்டு மனுதாரரின் நிறுவனத்திற்கு சேரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.28,464/– வழங்கப்பட்டு முறையீட்டு மனுதாரரது கோரிக்கை நிறைவேற்றயதைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பான நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம்ஆண்டு, டிசம்பர் திங்கள் 18 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்.

1. திரு. M. ஆறுமுக நயினார்,
   உரிமையாளர்,
   கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
   2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
   மைலாப்பூர்,
   சென்னை – 600 004.
2. செயல் அலுவலர்,
   புதூர் பேரூராட்சி,
   திருநெல்வேலி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்,
   என்.ஜி.ஓ.'பி' காலனி, ஜவஹர் நகர்,
   பெருமாள்புரம் அஞ்சல், திருநெல்வேலி–627007.